விசேஷ விளம்பரத்திற்கு!

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே நாச னேந்தை யினையடி நீழலே.

விசேஷ விளம்பரத்திற்கு

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-உ தேதி ஆங்கிலம் 7

[புத்தகம் ருக] யாழ்ப்பாணம்:— விஷு வரு ஆவணி மீ உ ச உ (1941 ஜூலை 7 திங்கட்கிழமை) [இலக்கம் உரு]

சரித்திரத்துறையும் சைவ சமயமும்

(ஸ்ரீமான். ஆ. சுந்தரமூர்த்திப்பிள்ளை அவர்கள் எழுதியது)

தமிழ்நாட்டுப் பழங்கால சரித்திரத்தை அறிந்து இன்புறுவதில் நமக்கு விருப்பம் மீதுண்டு. ஆனால் அவ்வக் காலத்துப் பெரியார் அரசினைக் கோலவைப்பட எழுதி வைத்த நிலா. ஆகவின், இக்காலத்துப் புலவர் பலர் அத்துறையில் இறங்கி அதனை ஆழப்பார்த்து வருகின்றனர். அவருக்கு ஆராமாக நிற்பவை கல்வெட்டு, நாணயம், பட்டயம், அவ்வக் காலத்தார் எழுதிவைத்துப் போந்த குறிப்பு, இலக்கியம், கர்ண பரம்பரை முதலியன. இவைகளெல்லாம் சுந்தோபசுந்தரியாகத்தில் (நிலைத்தவை யெனும் பெண்ணாணமாகச் சுந்தனுல உபசுந்தனும், உபசுந்தனுல சுந்தனும் மண்டெழிந்து சம்பான ஒரே: இந்த நியாயம் கல்வெட்டு, நாக முதலியவற்றுக் ஒன்றுகொன்று பொருந்தாமல மாறபட்டு ஒன்றனை மற்றொன்று ஒழிக்குமிடத்துப் பிரயோகிக்கப்படுகிறது.) நிற்கின்றன; புதியனபுதியனவாகத் தோன்றுகின்றன. அதற்கும், ஆராய்ச்சி ரது உட்கிடை அவர் எழுதுஞ் சரித்திரத்திற் கலங்கவுந் செய்கின்றது. உண்மை உண்மைற்ற உரைத்தல்வேண்டுமென்ற விருப்பினரும் மிச்சி லர். ஆகவின், இப்பொழுது எழுதப்படுஞ் சரித்திரக் குறியை ஒன்றுகொன்று எதிரிட்டுக் கிடப்பதோடு, காலந்தோறும் மாறிக்கொண்டுமே வருகின்றது. இத்துறை தன் குழுவிப்பருவம் கீகவி முற்றப்பெறுவதுமட்டுமே பிறிதொரு துறை ஆராய்சிக்குச் சிற்பம் தரவுசெய்வதுமிலை.

ஆனால், தற்காலத்துச் சைவருட் பலர், காண்பாரு பெருகுதெடுத்தோட அதனிடை அகப்பட்டு அலமரும் (அலமரும்—சுழலும்) மான் கட்டத்தின் சீரரவ் (சீர்-தன்மையுடையவர்) சான் நாசிகத்தில் மொத்துண்டு தம்தம் நாமே மதித்து, அம்மதுக்கை யேவிட்டாக தமராயாயச்சி சைவசாத்திரக்கு இத்தனைப் பொலவாகு குழுமெனபதை யோராயல் தமது உளனெனும் எருகுழியில் முனைந்து வெளிபோதலறறை யென்னாக 'தமிழ் மொழாது பழஞ் சரித்தம்' மென்ற பலபுத்தகங்களை வெளிப்படுத்தினார். இத்தகைய ருக்குச் சைவ விரோதமான புதுக்கொகை, கேனுட்டாராம் முதலியவற்றிலிருக்கும் பிரேமை இல்லொழுக்கிற்கு பேணுக்குதற்ஞ் ஞாநாய் சாதலிக்குஞ் சோராமட்டாரு. ஆகவின், அவர் தமிழ் நாட்டின் எதிர்கால இளைஞர்களுக்கு அப் புதுமைகளை பெரிதுஞ் சாதகஞ் செய்யமெனக் கருதிக்கொண்டு, அவையனை நாம் மக்களிடைப் பரப்புமாறு 'பழந்தமிழர் ஞானம் அவைகளை தழுவியுளார்கள்' என்ற அணிந்த விபரிதம் பேசுவர். இன்னும் அவர் நமக்கு யேதகிவாகமம், சைவசாரியர், சைவசாரம், சைவமடாலயம் முதலியவை எதிர்செய்து நிற்குமாயின் அவையனை நிக்கிக்கொழுதக் கொஞ்சமும் அஞ்சார். சரித்திரத்துறைமது நாட்டுக்குப் புதிதாயின், அவர் துறைப்பதை யெல்லாம் அதுவும் ஏற்றுக்கொள்ளும் இயல்பினராயிற்று. சமயநூறுறை யாயிய பகம்பொன்னின் செழுமையை அளக்கற்பத் நாமெழுஞ் சரித்திரத்துறையாயிய செக்குலக்கை யே உரையாளி யென்பது அவரது நிர்ந்த முடிவு. அதாவது: சரித்திரத்துறைக்குப் பொருத்தாக சமயக் கொள்கையை நிராகரித்தல் வேண்டுமென்பது அவர் கருத்தென்க. இனி, அவரெழுதியவற்றுட் சிலவற்றைத் தானிபுலாகாயம் பற்றி (தானிபுலாகாயம்—ஒரு பாடுச் சேர்ந்தக்கு ஒரு பருக்கை) பைப் பூதம் பார்த்த அறிவது போன்ற நெற். முற்றிலும் பார்த்தறிவதற்குப் பதிலாக எங்தேசகதைப் பார்த்த முழுவதையும் நீர் மானிக்குமப்பாத இந்த நியாயம் வழங்கப்படுகிறது) கண்டு எடுத்த விவகரித்தெழிப்பாம்.

'மதுத்தமிழர் சிவனென்னும் பெயரால் கடவுளை வணங்கி வந்திலரே' யென்ற இப்புதிய துறையார் கரைவர். பழந்தமிழரது வரலாறும், சிவமக்கினைத் தெரிக்கும் விரிவான பழைய சைவத்தமிழ் நூல் ஒன்றுமிலும் இப்போது காணப்படவில்லை. ஆகவின், அத்துறையார் சமயநூல்லவியை தொல்காப்பியம், (தொல்காப்பியம் இப்பொழுதான சிறந்த தமிழிலக்கணநூல். இதனை இயற்றியவர் அகத்தியமுனிவரின் மாணாகரும் சாதாவினி முனிவரிடை புதல்வருமாகிய தொல்காப்பியர். இவர் இயற்பெயர் திரணதூமாக்கினி) மணிமேகலை (மணிமேகலை-இதுபௌத்தமயக் கோட்பாடுகளை எடுத்துச் சொல்லும் நூல். இது தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. இதனை இயற்றியவர் கலாவணிகன் சாத்தனு (சாத்தனார்) முதலிய வேற்றுத்துறை நூல்களில் ஆண்டாண்டு இடைப்பிறவாவகையாக. இவையு குறிக்கும் வர்துள்ள ஏசுத்தப பொதுவசனங்கள் கைத்துப் பழந்தமிழரது சைவத் நிறுக்கை யனவிட்டு, மருதகவத்துறையை வைதது வழக்குத் துறையை யனவிடுவதோர் சழக்கு நெற்பட்டார். உண்மையில் பழந் தமிழாமட்டுச் சிவமக்கள் மிகவியாயின, அவர் 'விச்சைநூல் பலகற' றப் பிறப்பு, முதலியவற்றை சிறப்புற்றிருந்தாராயினும் 'சிவன் அருள் விரவாக கொச்சை ச்வர்'கொண்டும், 'சிவவிறை கல்வி சாலச் சிறப்பொன்றும் எமமாறு கடிக்கொதாதுகப்படுவர், ஆனால் இப்புதிய நாதபாரி தர்புதுமைகளையே துழைநூலாகக் எடுத்தாளுர் அவர்கள்தோசுப பொதுவசனம்புதலிய ஆதாரவன எமது நுதாகத்தானது சிவகிறைகளினதுமும் அவர்குங் கருவிகளாகல் எவ்வாறுஞுமிலவே. ஆகவின், சைவமலவளர்த்த இடைக்காலத்துத் தமிழ்ப்பெரியாரது.

'பாண்டிநாடே பழம்பதி' (திருவாசகம்)

'தமிழன் கண்டாய்' (திருஞானசம்பந்தர் தேவாரம்)

'தேவர்சங்கப் புலவனுர்' (பெரியபுராணம்)

'பழைய வைதிக சைவம்பரக்க வே' (கோயிற்புராணம்)

என்றின்னோர்க்கு எண்ணிறந்த வச்சிர வாசகங்களை வைத்துமைதமுதறமிழர் தமிழ்நாட்டுக்கும் தமிழ்மொழிக்கும் உரியகிலத்தையே வழிப்பட்டுக் அச்சிவத்தோடு சம்பந்தாய சைவமயத்தையே தழுவியும் உய்க்தனரென்ற யாக்கூற அம்முதுகைக்கண் வந்திதழ வாழ்கேம்.

சிவாலயங்கள் இப்போது அமைக்தன்னவாறு பழங்காலத்தில் தமிழ்நாட்டில் அமைக்திருக்கவில்லை. என்றும் மாமும் அதனடியிற் கிலவிக்க முர்த்தியுமாகவே அமைந்திருந்தன' வென்றும் இப் புதிய துறையார் பிதற்றுவர். இப்போதுள்ள ஆலயப் பெருங் கட்டடங்களை யெல்லாம் இடித்துத் தரைமட்டமாக்கி விட்டு, தம் மனம் போனவாறு வழிபாடு நிகழ்த்தவேண்டுமென்பது அவரது கருத்துப்போலும். சைப்பு மூர்த்தங்கள் முனைத்தெழுந்தனவென்ற எந்த படவோலுக் கொள்ளமாட்டான். காடு நாடாகுல் ஊ

தொடர்ச்சி 4ம் பக்கம்

நடுச்சாமம்வரை நடந்த படக்காட்சி

பட்டினசபையாருக்கு ஒருசங்கடமான நிலைமை

யாழ்ப்பாணம், புதன் இப்போது யாழ்ப்பாணம் பட்டினசபைக்கு ஒருஇன்பகரமானசங்கடம் ஏற்பட்டிருக்கிறது. இதுபோதாதுசங்கடம் இலங்கையில் ஏற்கப்பட்டினசபைகளுக்கும் ஏற்பட்டதுகிடைப்பதென்று சொல்லலாம்.

சென்ற இரவு 7½ மணிக்கு யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் கப்பிரின்டெண்ட் மிறறர், டி. சி. டி. பட்டேயும் சப்-இன்ஸ்பெக்டர் இராமாதனும் யாழ்ப்பாணத்திலுள்ள இரு படக்காட்சி க்கியகளுஞ் சென்று மாலை 6 மணி தொடக்கம் இரவு 10 மணி வரையுமே படக்காட்சியை நடத்தலாமென்பது பட்டினசபைத் தலைவரின் உத்தரவு என்று அப்படக் காட்சிச்சாலைக்காரருக்குத் தெரிவித்தார்கள். அப்படித் தெரிவித்தும், ஒரு படக்காட்சிச்சாலை அதிபர்கள் இரண்டாவது காட்சியையும் நடுச்சாமம் வரையும் காட்டினார்கள்.

"அவசியமற்ற தலையிடு"

பெப்ரவரிமீ 25-உ திகதி கூடிய பட்டினசபைக் கூட்டத்தில், 1941-உ வருஷ: ஜூலைமீ 1-உ திகதியிலிருந்து இரவு 6 மணி தொடக்கம் 10 மணிவரையுமே படக்காட்சிகளைக் காட்டக்கூடியதாகக் கட்டுப்படுத்த வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஜூலைமீ 8-உ திகதி வின்ஸன்தாமசு கொம்மிஷனர் பட்டினசபைத் தலைவருக்குப் பதில் உத்தியோக முறையில் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அக்கடிதத்தில் குறித்த கட்டுப்பாட்டைக் கொண்டு வருவது சரியல்ல என்பதற்கு நியாயங்கள் எடுத்துக் காட்டப்பட்டிருந்தபோதிலும் குறித்த விஷயத்தைப் புனராலோசனை செய்யவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதைச் சபையோரின் ஆலோசனைக்காகத் தலைவர் பட்டினசபை அங்கத்தவர்க்கு அனுப்பி தனித்தனி வாட்டினார்.

கேற்றுத் தொடக்கமாகக் குறித்த கட்டுப்பாடு கொண்டுவரப்படலாமென்று 7 அங்கத்தவர்கள் அபிப்பிராயம் தெரிவித்ததாக தெரிகிறது. மிகுதி இரு அங்கங்கள் மற்ற தலையீடு என்று புறக்கணித்துவிட்டார்கள். திரு. V. சுப்பையா மிறறர் சாஸ்பத்திரானு என்னுமிருவரும் குறித்த கட்டுப்பாட்டைக் கையாளுவதைப் பின்பாடுவைத்தால் நல்லது என்று அபிப்பிராயந் தெரிவித்தனர்.

ஜூலைமீ 13உ திகதி வரிபிறப்போர் சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தவராகிய திரு. V. S. இராமலிங்கன் தான் பிரேரக்கப் போவதாக அறிவித்தன் கொடுத்திருந்த பிரேரணையை வாசல் வாங்கிக் கொண்டார். அவர் பிரேரிக்க விருந்த பிரேரணை வருமாறு:-

"இச்சபையால் 25-2-41 இல் நிறைவேற்றப்பட்ட பகிரங்கக் கொண்டாட்டங்களின் காலக் கட்டுப்பாட்டுப் பிரேரணை சம்பந்தமாக பொது ஜனங்களுக்கிடையே அதிருப்தி ஏற்பட்டிருப்பதால் நான பினவருந் திருத்தப் பிரேரணையைப் பிரேரிக்கின்றேன். அஃதாவது படக்காட்சிகள் நடக்கக்காட்சிகளை இரவு 6 மணிக்கும் 10 மணிக்கு மிடையில் மாத்திரமே காட்டக் கூடியதாக வேண்டுமென்ற கட்டுப்பாட்டைக் கொண்டு வருவதோடு நாடகக் காட்சிகளின் காலத்தைச் சமயத்திற்குத் தக்கவாறு சீட்டிப்பதற்குத் தலைவருக்கு அதிகாரமும் இருத்தல் வேண்டும் என்பது"

அன்றைய கூட்டத்திலேயே, இக்கட்டுப்பாட்டினால் படக்காட்சிச் சாலைள் பாதிக்கப்படும் என்பதற்குரிய நியாயங்களைக் காட்டிச் சிலைன் நியேட்டர் லிமிற்றெட் டைச் சேர்ந்த திரு A. தம்பையா எழுதியிருந்த கடிதமும் ஆலோசிக்கப்பட்டது.

இவ்விஷயம் சம்பந்தமாகச் சபை நிருபிப் ஆலோசிப்பதற்குக் காரணம் எதுவும் இல்லையென்று திருதம்பையாவுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று சபை தீர்மானித்தது.

பொதுஜன அபிப்பிராயம்

இவ்வாறு படக்காட்சிகள் காட்டப்படுங் கேரத்தைக் கட்டுப்படுத்துதல் பொதுஜனங்களுக்கு விருப்பமில்லையெனத் தெரிகிறது. சிறப்பாக, பெரிய கடையிலுள்ள நடைகளில் வேலைபார்ப்போர் தாம் 9½ மணிக்குப்பிறகே படத்தைக்குப் போகக்கூடியதா யிருக்கிறதென்றும், இதைக் கட்டுப்பாடு தமக்குப் பெரிய வசதியீனத்தை உண்டு பண்ணி விட்டதென்றும் சொல்லுகிறார்கள் எனத் தெரிகிறது.

இன்ற குறித்த படக்காட்சிச் சாலை அதிபர்கள் பட்டினசபைத் தலைவரின் கட்டுப்பாட்டுக்கமைய மல இரண்டு காட்சிகள் காட்டியதாரம்பக்தமான விளைவு என்னவாகுமோ என்று பலர் கருதுகின்றனர். குறித்த படக்காட்சிச்சாலை அதிபர் மீது பட்டினசபைத் தலைவர் வழக்குத் தொடர்வாரோ என்றும் சிலர் கேட்கின்றனர்.

தமது யுத்தரவை மீறியதாக இன்னும் பிரேஸ்லாரிடமிருந்து தமக்கு உத்தியோக முறையிற் செய்தி கிடைக்கவில்லையெனும், அத்செயை செய்தி கிடைக்குமவரை தாம் என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறார்களென்பதை இப்போது தெரிவிக்க முடியாதெனறும் பட்டினசபைத் தலைவர் ஒரு பத்திரிகை நிருபரிடம் கூறினார்.

மட்டக்களப்பு அரிசி ஆலை

அடுத்தவாரத்திற் றிறக்கப்படும்

மட்டக்களப்பிலுள்ள புதிய அரிசி ஆலை அடுத்தவாரத்தில் திறக்கப்படும். இந்த ஆலை சகல வீதத்திலும் சமீபகாலத்தில் அம்பாந்தோட்டையில் திறக்கவைக்கப்பட்ட ஆலையை ஒத்திருக்கிறது.

மட்டக்களப்பு ஆலை மிகவும் முழுமாக வேலை செய்தால் மாதமொன்றுக்கு 25,000 புஷல் அரிசி உதவ முடியும். நெல் தம்பாவு செல்லும் வகின இயந்திரமென்றும் இந்த ஆலையில் நிறுவப்பட்டிருக்கிறது. இந்த ஆலை மிகமாணம் முழுதாகும் சேவைசெய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தானுக்கு எதிர்ப்பு

சென்னை ஹிந்துக்களின் ஏற்பாடு

சென்னை, யூலை 1

அகில இந்திய ஹிந்து மகாசபையின் நிர்வாகத் தலைவர், டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி பெங்களூருக்குப் போகும் வழியில் இம்மாதம் 13உ தேதி கல்கத்தாவிலிருந்து இங்கு வருகிறார்களாம். அன்று மாலை அவரது தலைமையில் ஹிந்துக்கள் பலர்கள் எதிர்ப்புக் கூட்டமொன்றை ஏற்பாடு செய்துள்ளார்கள்.

பத்திரிகாசிரியர் மீது வழக்கு

கல்கத்தா ஜூலை 30

'தேச தர்ப்பன்' என்ற குருமுகி பாஷைப் பத்திரிகையில் வகுப்புத் துவேஷம் வளரும்படியான கட்டுரை யொன்றை ஏப்ரல் 30உ தேதி பிரசுரித்ததற்காக அப்பத்திரிகையின் ஆசிரியர் ஜீமான் நிரஞ்சன் ஸிங் பாதகப்புச் சட்டப் பிரகாரம் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார். அவிப்பூர் நீதிபதி அவரை விடுதலை செய்துவிட்டார்.

ஜேர்மனியர் அறிக்கை விபரம்

லக்ஷம் ருஷியத் துருப்புகளைக் கைது செய்தனராம்

பிருத்தானிய இராணுவத் தூதுக்கோஷ்டித் தலைவர் சோவியத் தலைமைக்காரியாலயத்தை யடைந்தார்

பெர்லின் யூலை, 2

இன்ற ஹிற்லரின் தலைமைக் காரியாலயத்திலிருந்து வெளியிடப்பட்ட இராணுவ அறிக்கையிடை அதிகமையொன்று பின்வருமாறு தெரிவிக்கின்றது:-

பியாலிஸ்டாக்குக் கிழக்கேயுள்ளதுகொண்ட சோவியத்திராணுவத்தின் பெரும்பகுதி கேறேறையிலிருக்கிறது. நாம் மூலமாக சுற்றுவளைக்கப்பட்டன.

இதுவரையிலும் ஏறறுக்குமை ஒரு லக்ஷம் ரூஷியத் துருப்புகள் கைது செய்யப்பட்டிருக்கின்றன; கத்துருவிடமிருந்து 400 டாங்கிகளும் 300 பீரங்கிகளும் கைப்பற்றப்பட்டிருப்பதாக இதுவரை கணக்கிடப்பட்டிருக்கிறது.

கேற்றுப் பூர்த்தியான காலிஸிப் பகுதி டாங்கியுத்த முடிவிற் கைப்பற்றப்பட்ட டாங்கிகள் உட்பட்டசத்துருவுக்கு 200 டாங்கிகள் கஷ்டமாயின;

ஸ்விடன்-பிரிட்டிஷ் ராஜரீகத் தொடர்பு

லண்டன், யூலை 2

பிருத்தானிக்கும் ஸ்விடனுக்கு மிடையே ராஜரீகத் தொடர்புகள் இன்னும் சாதாரண நிலைமையிலேயே இருந்து வருகின்றன; இப்பொழுது பிருத்தானிய அரசாங்கத்தரர் பிரஸ்லாக்குடனும் தொடர்பு வைத்துக்கொண்டதா னிருக்கின்றனர். ஸ்விடன் வழியாக ஜேர்மன் துருப்புகள் சென்றுதற்கு அதரசாத்தின் அரசாங்கம் சமமதித்ததது பற்றியும் ஜேர்மனியுடன் சோர்த்துகொண்டு யுத்தத்தில் ஈடுபட்டு பின்னிஷ் அரசாங்கம் உதவிதேடித்திருப்பது பற்றியும் கொம்மன்ஸில் கேள்விகளகேட்கப்பட்ட பொழுது மேலே குறிப்பிடப்பட்ட இரு விபரங்களையும் மிஸ்டர் ஈடன் அறிவித்துக்கொண்டார். சோர்வியலிருந்து பின்லாந்துக்குச் சென்றும் (ஜேர்மனபட்டாளமொன்று தங்கள் தேசத்தின் வழியாகச் செல்ல அநுமதிக்கத் தீர்மானித்திருப்பது பற்றி ஸ்விடிஷ் அரசாங்கத்துக்குத் தகவல் அறிவித்திருப்பதாகவும் மிஸ்டர். ஈடன் கூறினார்.

பிருத்தானிய இராணுவக்கோஷ்டித் தலைவர்

லண்டன் யூலை 2

ரூஷியாவுக்குச்சென்ற பிருத்தானிய இராணுவத் தூதுக்கோஷ்டித் தலைவரான தளகர்த்தர் மக்பாரலேன சோவியத் இராணுவத் தலைமைக் காரியாலயத்துக்குப் போய்ச் சேர்ந்துவிட்டார்.

ராமதீர்த்தரின் உபதேசக் கதைகள்

ரா. ஸ்ரீ. தேசிகன், எம், ஏ.

ராமதீர்த்தர் ஒரு காலேஜில் பேராசிரியராக இருந்தார். இடைவிடாது அவரைக் தொடர்ந்த அந்த வேலைக்கிடையே உண்மை ஒலி மதுரமாய் எழுந்து அவரை அழைக்க ஆரம்பித்தது. அதைத் தொடர்ந்து எல்லாவற்றையும் துறந்து அது நிகிற வழியெல்லாம் சென்று அமைதி அடைந்தார்.

ராமதீர்த்தரை நினைக்கிற பொழுது அவருக்கு முற்றும் மாறான வேறோர் ஆசிரியர் என் கண்முன் நிற்கிறார். அவர் நா ஒன்று பேசுகிறது. நிக்கை யொன்று நினைக்கிறது; கையொன்று காடுகிறது. அவர் ஒரு நாள் யக்ஞமாகம் செய்து கொண்டிருந்தார். மண்டபத்தில் உபாத்தியாயர் ஒரு பக்கம்; மாணவர்கள் ஒருபக்கம்; ஒரு பெருங்கூட்டம். முதலில் எல்லாம் ஓர் அமைதிதான்.

"யார் முனி தெரியுமா? ஆசையை விட்டவன், பயத்தை விட்டவன், கோபத்தை விட்டவன், நிச்சய புத்தியுடையவன் எவனோ அவன்தான் முனி. அவனிப்போல நாமும் ஆகவேண்டும்" என்று ஆவேசமாகப் பேசிக்கொண்டிருந்தார்.

இந்த வேதாந்தத்தின் மர்மத்தை இளமை முதுக்குள்ள மாணவர்கள் அறிவார்களா? சொன்னவற்றைத் திருப்பிச் சொல்லுவதுஞ் வந்த அவர்களினுடைய, வீட்டிற்குப் போக வேண்டு மென்ற ஆதிரத்தினாலோ பெஞ்சினை ஆட்டினார்கள்; கிளிபோல் கத்துகிறது, பூனை போல் கத்துகிறது இவ்விஷயங்களில் ஈடுபட்டார்கள்.

உபாத்தியாசகருக்குக் கோபம் வந்தது; அவர்களைத் தீவெழ கோக்கினார்; 'கழுதைகளே! உர்ரனுக்கு ஞானமில்லையா? இப்படிச் செய்தீர்களேயானால் உங்களைப் பனிக்கூடத்தை விட்டு அடித்துத் துரத்தி விடுவேன்" என்ற கடுமையாகப் பேசினார்.

சிறிது நேரம் அமைதி ஏற்பட்டது. மறுபடியும் ஈசுரத்தைச் சொல்லி வியாக்கியானம் செய்ய ஆரம்பித்தார்.

மறுபடியும் அதே சத்தங்கள்; அக்கக் கடுமையான வார்த்தைகளே. இதைப் பார்த்த உபாத்தியாயர் தங்களை அறியாமலே கழுந்கென்று சிரித்து விட்டார்கள். அவர்கள் சிரித்த மர்மம் உபாத்தியாசகருக்கு விளங்கவில்லை. 'இன்னும் விளங்கியிருக்குமா?' என்பது சாந்தேகந்தான.

உண்மையான ஞானம்வை உள்ளவனுக்கு இது புலனாகாமற் போகாது. நம்மைப் பார்த்து நாமே கையாடுதோ தன்னையை நம் உள்ளத்திலே விருத்தி செய்து கொள்ள வேண்டும்.

இம்மாதிரியான போதக ஆசிரியர்களை வாழ்விலே ராமதீர்த்தர் கண்டிருப்பார் என்பதில் சந்தேகமில்லை. அவர்களை மனத்தில் வைத்துக் கொண்டுதான் யுதிஷ்டிரர் மானுக்காரியருக்கு போதனை கிழத்த ஒரு விருத்தாந்தத்தை நமக்கு அவர் கிருகிறார் போலும்.

யுதிஷ்டிரர் மற்றப் பிள்ளைகளோடு பள்ளிக்கூடத்தில் பாடம் வாசித்துக்கொண்டிருந்தார். தம்மை உபாத்தியாயர் வகுப்பிற்கு வந்து பையன்களைப் பாடங் கேட்டார். அவர்கள் அவைகளைக் கடகடவென்று ஒப்பித்து விட்டார்கள். யுதிஷ்டிரர் முறை வந்தது. "என்ன படித்திருக்கிறாய்?" என்று வினவினார் உபாத்தியாயர்.

"அரிச்சுவடி படித்திருக்கிறேன்; முதல் பாடம் படித்திருக்கிறேன்."

"இவ்வளவுதானா? இதற்குமேல் படிக்கவில்லையா?" என்று கேட்டார் உபாத்தியாயர்.

"இல்லை; இரண்டாவது வரி கூடப் படித்திருக்கிறேன்" என்று சற்றத் தயங்கிப் பதில் சொன்னார் யுதிஷ்டிரர். ஆனால் அரசிளங் குமாரர் முகத்தில் அமைதி தோய்ந்த நகை விளையவிந்தது.

உபாத்தியாயருக்குக் கோபம் பிறந்துவிட்டது; "இவ்வளவு மெவுகப் போனால் என்றைக்குப் பாடம் முடியப்போகிறது?" என்று எனக்து யுதிஷ்டிரரை அடித்தார். அடித்தேன்னா? முதற்றில் சோப்க் குறியைக் காணவே இல்லை.

'இதென்ன! மற்றவர்கள் எரித்துப் பேசுவார்கள்; இவன் வாயைத் திறக்கவில்லையே' என்று சற்ற நிதானிக்கலானார். யுதிஷ்டிரர் பொறுமைச் சியோப் கின்றார். முன்போன்ற அமைதிதான்; சிரித்த முகந்தான். உபாத்தியாயர் பாடத்தைக் கவனித்தார். 'ஆறவது எனம்' என்று எழுப்பப்பட்டிருந்தது. ஒரு கண் பையன்மீது விழ, மற்றொரு கண் பாடத்தின் மீது விழப் பாடத்தைக் கவனித்தார். உண்மை மின்னலடித்தது அவர் உள்ளத்தில். ஆறவது எனம்; கோபம் கொள்ளாமே உண்மை உரை: இம் முன்று தத்துவங்களையும் நெஞ்சிலடிமிருந்து குருநற்றுக்கொண்டார்.

யுதிஷ்டிரர் கோபத்தை அடக்கிக் கொண்டு முகமலர்ச்சியோடு இருந்தார். ஆனால் கோபம் மனத்தில் எழாமல் இல்லை. அதனுல்தான் இரண்டாந் தத்துவத்தை முழுவதும் கற்கவில்லை என்று தாமதித்துப் பதில் சொன்னார். அப்படித் தாமதித்துப் பதில் சொன்னவுடன் அவர் உண்மை உரைத்தார் என்று விளங்கிவிட்டது. அறுபடபூர்வமாக உண்மைகள் களிந்தன்றான் நாம் உண்மையின் அற்கிறோம். உண்மை நிலையை உடனே அடைந்துவிட முடிகிறதா? அறுபவம் சலபமாகக் கிடைத்துவிடுவதா? தெம்மங்கு பாடி அடைந்துவிட முடியுமா? ஞானம் தொங்கத்தினால் வந்துவிடுமா? வாரது. மனிதன் தன்னுடைய எல்லாவற்றையும் நிபாகம் செய்ய வேண்டியிருக்கிறது. விடு, வாசல், மனைவி, மக்கள் எல்லாவற்றையும் விட வேண்டியிருக்கிறது என்று பிளேக் (Blake) கூறினார்.

எல்லாவற்றையும் துறந்து இல்லறுபவர்கை அடைந்தவர் ராமதீர்த்தர் என்பதை அவரது துரசன்னியாசி வாழ்வு உலகங்கேட்க முரசடிக்கிறது. அவர் ஆக்ரா விசாரே அரணியத்திலிருந்து 171 உபதேசக் கதைகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. ஆகையால், சித்தத, பகவதனுபவம், சுரம், மாயை, அன்பு, இவைகளின்பாற்றிய கதைகளைத் தந்திருக்கிறார்; புராணக்கதைகளில் வேதாந்த அர்த்தத்தைப் புகுத்துகிறார். உதாரணமாக:-ஒருமடுவிலுள்ள பாம்பின் மேல் கண்ணனுடைய விருத்தாந்தத்திற்கு வேதாந்தபரமாகப் பொருள் கூறுகிறார். மடுவே மனம், கிருஷ்ணன்போல் நாம் ஆவதற்கு மனமாற்றமடுவிலே இருக்கிற ஆசாபாசவாசனையே பாம்பின்மீது குதித்காடவேண்டும், ஒரு தரத்தில் ஆற்ற சரியும் அல்ல இது, மனம் தூய அப்படியே அழித்துவிட வேண்டும், அப்பொழுதான ஆத்மாவுக்கு வெற்றி என்கிறார். புராண விருத்தாந்தங்கள், வரலாறு உபதேசங்கள் இவைகளை உருவகப்படுத்திக் கதைகள் சொல்கிறார். உருவக இலக்கியமாகக்(Symbolic)

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

ழிக அந்தணர் வானவ ராளினம் விழுதணபுலல் வேந்தனுமோங்குக
ழுக சீயதேல் லாமா ளுமமே
ழுக வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷ்ணு ஆவணி உசவ திங்கட்கிழமை

ஸ்ராலினின் பேச்சு

ரூஷியாவிற்கும் ஜர்மனியருக்கு மிடையிலே இப்பொழுது நடக்கும் யுத்தம் போல் கோரமான யுத்தம் முன் எக்காலத்திலும் நடக்கவில்லையெனச் சொல்லல் தவறாகா; ஆனால் இந்த ரூஷிய ஜர்மனிய யுத்தத்தில் நாளதோறும் நடக்குஞ் சமாசாரங்களை உள்ளபடி அறிந்து கொள்ள முடியாமலிருக்கின்றது; சமர் விஷயமாக வருஞ் சமாசாரங்களெனிலோ ஒன்றோடொன்று பெரிதும் முரண்படுகின்றனவாகக் காணப்படுகின்றன. ஜர்மனியர் மூலமாக வருஞ் சமாசாரங்கள் தமக்கே பெரும் வெற்றி கேர்க்து வருகின்றன வெனக் கூற, ரூஷியர் மூலமாக வருஞ் சமாசாரங்கள் அவர்களுக்கே வெற்றி யென்ற கருத்துப்படக் கூறுகின்றன. இதற்குமுன் ஜர்மனியருக்கும் வேறு நாட்டினர்க்கும் நடந்து வந்த யுத்தங்களிற் கிடைத்த சமாசாரங்கள் இவ்வளவு மாறுபாடானவையல்ல வெனலாம். ஆயினும் ரூஷிய சர்வாதிகாரியாகிய ஸ்ராலின் இற்றைக்கு இரண்டு மூன்று தினங்கட்கு முன்னர்த் தம் சனங்கட்கும் உலகோர்க்கும் ஒலிபரப்புங் கருவி மூலமாகச் செய்த பிரசாரணத்தைக் கொண்டு நாம் சிலஉண்மைகளை அறிதல் முடியும். அந்தப் பிரசாரணம் இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்திற் சுருக்கமாக மொழிபெயர்க்து வெளியிடப்பெற்றுள்ளது. ஸ்ராலின் தாம்பேசும்போதே பதஷ்டத்தோடும் தடுமாற்றத்தோடும் வாக்குத் தடைபடப் பேசினாரென்றும் தம்நிச் சமாசாரத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. பல்லாயிர மைல் தூரத்திலிருந்து வாசிப்பவர்களாகிய நாங்கள் இச்சமாசாரங்கட்குப் பொறுப்பு வகித்தல் இயலாத கருமமாகும்.

ஸ்ராலினுடைய யுத்தப் பிரசாரணத்தை நுட்பமாகப் படிப்பவர்கள் இந்த யுத்த நேரத்தில் ரூஷியரின் நிலைமையை ஒருவாறு யூகித்தல் முடியும். ரூஷியர் நம்முடைய ஜர்மனியர் யுத்தத்திற்கு வரமாட்டார்களெனறு நம்பியிருக்குஞ் சமயத்திலே ஹிட்லர் காத்திராப் பிரகாரம் அவர்களுடன் போர்க்கறை கூவிச் சென்றுரென்பது ஸ்ராலினுடைய பேச்சால் தெற்றெனப் புலப்படக் கிடக்கின்றதெனலாம்; மிஸ்டர் ஸ்ராலின் தம்முடைய பேச்சில், "முந்தி நெப்போலியனின் சைகியம், பிறகு உவில்லியம் கெய்ஸருடைய சைகியம் என்னுமிவைகளை வெல்ல முடியாதனவென்று சொன்னார்களே, ஆனால் அவைகளும் ஈற்றில் வெல்லப்பட்டனவாமே, அப்படியே தூப்பொழுது ஹிட்லருடைய சைகியம் வெல்லமுடியாதது போற் காணப்படினும் காலதத்தில் வெல்லப்படும்" எனக் கூறுகிறார். ரூஷிய சர்வாதிகாரி கூறுவது நிசந்தான். தோற்றமுடையவைகளெல்லாம் முடிவு முண்டென்றபடி எவையும் ஈற்றில் வெல்லப்படுதலும் இப்போர் தொடர்தலும் நிச்சயம். நாட்டில் வெளைஞ் பெருக்கோடு கூடிய பெருமழை பெய்யும் போதும், பிரசண்ட மாருத மெனறு சொல்லப்படும் பெருங்காற்று வீசும்போதும் அந்த நாட்டிலுள்ள சனங்கள் பெருமழை சில தினங்களில் நின்றுவிடுமென்றும் பெருங்காற்றுச் சில மணி நேரத்தில் ஒழிந்துவிடுமென்றும் நன்கு அறிவார்கள். ஆனால் பெருமழை பெய்யும் போதும், பெரு வெள்ளம் பெருகும் போதும், பெருங்காற்று அடிக்கும் போதும் சனங்களுக்கு நேரும் ஆபத்து அரசர்கள், உயிர்ச்சேதம் முதலியவற்றைவிடே அச்சனங்கள் பெரிதாக அஞ்சுவதும் கஷ்டப்படுவதுமாகும். அவை ஒய்ந்த பினனரும் அவற்றால் நேர்ந்த சேதங்கள் நஷ்டங்கள் சரிவருதற்குநீடித்தகாலம் செல்லுமல்லவா? அதே போல, ஹிட்லருடைய யுத்தமும் படைவலிமையும் இன்னுஞ் சில காலத்தில் ஒழிதல் கூடும். ஆனால் அந்த ஹிட்லரின் யுத்தத்தினால் சென்ற 22 மாச காலமாக அவிரோதப்பாகக்கண்டம் படும்பாடும் அக்கண்டத்தில் நேர்ந்த நேரகின்ற அநர்த்தங்களும் கொஞ்சமா? இன்னும் இப்படியான அநர்த்தங்களுங் கஷ்டங்களும் எத்தனை மாசங்கட்கு, இல்லை யேல் எத்தனை வருடங்கட்கு நிலை கிற்குமோ யார்தாம் அறிவர்! யுத்தம் முடிந்த பின்னர்த் தானும் இத்நிலைகள் நீங்கிப் பழைய நிலைமை வர எவ்வளவு ஆண்டுகள் செல்ல வேண்டுமென்பதை யாரறிவார்? இவைகளை விட்டுத்தான் இந்தக் கொடிய யுத்தம் பரவ வொண்ணுதென்று உலகத்தவர் பிரார்த்தனை செய்கிறார்கள்.

ஸ்ராலினுடைய பேச்சில் இன்னும் நாம் அவதானிக்கக் கூடிய இரண்டு விஷயங்கள் உளவெனலாம். ஒன்று பிருத்தானியர் அமரிக்கர் என்னும் சாதியார் தமக்குத் துணைபுரிவரென ஸ்ராலின் எதிர்பார்த்திராமை. மற்றது, ஸ்ராலின் தமது பிரசாரணத்திலே கடவுள் தங்கட்கு உதவிபுரியாரென்று எங்காரினும் எடுத்துக் கூறாமையாகும். மிஸ்டர் ஜோஃஜி, ஹெர் ஹிட்லர் ஆகிய இவர்கள் இப்படியான பிரசாரணஞ் செய்யும் போது கடவுள் துணைபுரிவார், தெய்வம் எங்களுடனாள் கிற்கிறதென்று பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறவதுண்டு. ரூஷிய சர்வாதிகாரி அங்ஙனம் ஒரு வார்த்தையாவது தெய்வத்தைப் பற்றிச் சொல்லாமல் விட்டதற்குக் காரணம் அந்தச் சாதியாரிடத்துத் தெய்வக் கொள்கை குறைவென்று அறிந்தோர் சொல்லுகிறார்கள். தெய்வங் கொள்கையில்லார் செய்யுங் கருமத்தின் விளைவை, தெய்வமுண்டென்று நடக்கும் எம்போலியர் எடுத்துச் சொல்வது கஷ்டமெனலாம்.

இருவர் பிரேதமாகக் கிடக்கக் காணப்பட்டனர்

பருத்தித்துறையைச் சேர்ந்த அல்வாயில் கணபதிப்பிள்ளை கந்தையர், முத்தையா கப்பலப் என்னுமிருவர், அல்லூர் வேலுப்பிள்ளை வைத்திலிங்கமென்பவர் வளவிற் பிரேதமாகக் கிடக்கக் காணப்பட்டனர். அப்பிரேதங்களிற் பெல்லன் அடிக்கப்பட்ட காயங்கள் காணப்பட்டனவாம். குறித்த வேலுப்பிள்ளை வைத்திலிங்கமும் அவர் மருமகனுங் தங்கர்-கடராசா என்பவரும் சந்தேகத்தின்பேரில் விளக்கமறியலி லிடப்பட்டனராம்.

ந-வி

சிறைவாசிகட்குச் சமயபோதனை

யாழ்ப்பாணச் சிறைச்சாலையி லுள்ள கைதியரை மதியுக்கரருக்கு, ஞாயிற்றுக்கிழமை தோறும் சமயபோதனை செய்யும்படி, யாழ்ப்பாணம். காலஸர் கலாசாலை அதிபருள் ஒருவராகிய ஸ்ரீ வி. சின்னையா அவர்கள், யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாரால் நியமிக்கப்பெற்றுள்ளார்.

பட்டினசபைமீது நஷ்ட ஈடு வழக்கு

கைக்குளச் சந்தைக் குத்தகை ஏலச் சச்சரவு

வழக்காளியின் சார்பாகத் தீர்ப்பளிக்கும் போது நீதிபதி குறிப்பிட்ட அபிப்பிராயம்

யாழ்ப்பாணம் ஜூலை 3

பழைய சந்தைக் குத்தகைக்காரரும் வியாபாரியுமான என். பொன்னையா என்பவர் யாழ்ப்பாண பட்டினசபைத் தலைவரீது தொடர்ந்திருந்த நஷ்ட ஈடு வழக்கில் யாழ்ப்பாண மினவக்கீலட்டுக் கொமிஷனர் மிஸ்டர் லைமன்றெட்சிக்கோ வழக்காளிக்குச் சார்பாகத் தீர்ப்பளித்தார். அதனால் "சபை செய்துகொண்ட வியாபாரம் கேவலமானது" என்று குறிப்பிட்டார். இவ் வழக்கில் யாழ்ப்பாண பட்டினசபை கைக்குளச் சந்தையைத் தமக்குக் கொடுக்கத் தவறியதற்கு நஷ்டமாக 240 ரூபாவையும் தாம் பிணை பணமாகக் கொடுத்த ரூபா 50ஐயும் ஆகமொத்தம் 290 ரூபாவை வழங்கத் தருமபடி வழக்காளி வேண்டிக் கொண்டார்.

ஷ்டி சந்தைக் குத்தகை ஏலத்தில் விடப்பட்டபொழுது பட்டினசபைத் தலைவராகவிருந்த திரு. வி. பொன்னம்பலமும் மற்றைய பலரும் பிரதிவாதியின் சாரபாகச் சாக்ஷியங் கூற அழைக்கப்பட்டனர்.

கொமிஷனர் தீர்ப்பளிக்கும் போது கூறியவை வருமாறு:-

"கைக்குளச் சந்தையிலுள்ள கடைகளின் வாடகைப் பணத்தை அறவிடும் உரிமை வருடாந்தரம் பட்டினசபையால் விற்பனை செய்யப்படுவது வழக்கம். இந்த உரிமையை விற்பனை செய்வதற்கு முதலிற் கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படும். 1941ம் ஆண்டு உரிமையை விற்பனை செய்வதற்குக் கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்பட்டபோது ஒருவருமே கேள்விப்பத்திரங்களை அனுப்பவில்லை. அதன்பின் 1940ம் ஆண்டு கலம்பர்மீ 6ந திகதியன்று குறித்த உரிமை ஏலத்தில் விடப்படுமென்று விளம்பரப் படுத்தப்பட்டது.

வழக்காளி 1820 ரூபாய்க்குக் கேட்டார்

"ஏலவிற்பனை பட்டினசபைத் தலைவரின் மேற்பார்வையில் நடைபெற்றது. சென்ற பலவருஷகாலமாக, மேற்படி சந்தையைக் குத்தகைக் கெடுத்திருந்த வழக்காளி 1820 ரூபாய் வரை கேட்டார். அதற்குமேல் ஒருவருங் கேட்கவில்லை. ஆதலால் அவரே மிக அதிகமான தொகைக்குச் சந்தைக் குத்தகையைக் கேட்டாரென்று அறிக்கைபடப்பட்டது.

1941ம் ஆண்டுச் சந்தைக் குத்தகையை 1820 ரூபாய்க்குக் கேட்டது சம்பந்தமாக 1940ம் ஆண்டு கலம்பர்மீ 8ந திகதி சடைபெற்றிருந்த கூட்டத்துக்கு வரும்படி 1940ம் ஆண்டு கலம்பர்மீ 7ந திகதியன்று பட்டினசபையால் வழக்காளிக்கு ஓர் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது.

சந்தையைக் குத்தகைக்கு எடுப்பதில் வழக்காளிகேரு போட்டியிட்டவர்களிற் சாலமுத்துவனையர் ஒருவர். இவர் ஏலவிற்பனையின் போது 1780 ரூபாவுக்கு கேட்டு அந்த அளவில் நிறுத்தவிட்டார். மேற்படி கூட்டத்துக்கு வரும்படி அவருக்கும் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்ததென்று சொல்லப்படுகிறது.

தீர்ப்பின் சாரம்

கொமிஷனர் அளித்த தீர்ப்பின் சாரம் வருமாறு:-

"கூட்டத்தில் என்ன நடந்ததென்பதுபற்றி வழக்காளி கூறுவதுமுஞ் சபையின் சாரபிற் கூறப்படுவதுமுஞ் அற்ப விந்திபாசமாகவுங் காணப்படுகின்றது. ஆயின், வழக்காளி சபையின் முன்னிலையில் அழைக்கப்பட்டுச் சாக்ஷியங் கூறிய போது சந்தைக் குத்தகையை 1900 ரூபாய்க்கு வாங்குவதாகச் சபைக்கு எழுதிய ஒரு கடிதம் பற்றி அவரிடம் எடுத்துக் கூறப்பட்டதென்று தெரிகிறது. சாக்ஷியமுகமாதலினாலும் கூட்டத்திற்கு வரும்படி கேட்டிருந்ததாகச் சபைத் தலைவர் கூறினார். சாக்ஷியமுகமாதலினாலும் கூட்டத்துக்கு வரவில்லை. வழக்காளி சண்முகமுத்துலிங்கர் கேட்டதொகைக்கு அதிகமாகக் கேட்கவில்லை. சண்முகமுத்துலிங்கர் கேட்ட தொகைக்கு மேற்பட்டு ரூபா கூடுதலாக, அஃதாவது 1910 ரூபாவுக்குச் சாக்ஷியக் குத்தகையைச் சரவணமுத்து வாங்கினார்.

சண்முகமுத்துலிங்கர் தாம் சந்தைக் குத்தகையை 1900 ரூபாய்க்குக் கேட்டது உண்மைதானா என்பதை நிரூபிப்பதற்கு ஒன்றுவர் வெட்கப்படுகிறார். ஏலவிற்பனையின்போது அவர் சரவணமுத்துவுக்கு முன்னதாக குத்தகையை விலைக்குக் கேட்டதை நிமுத்திவிட்டார்.

வழக்காளியின் வேண்டோள்

சந்தைக் குத்தகை ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென்றும் அந்த விற்பனையில் தாமே மிகக் கூடுதலான தொகைக்குச் குத்தகை உரிமையைக்கேட்டிருப்பதாகவும் சபை அறிவித்திருப்பதால் சந்தைக் குத்தகையை ஆகக் கூடுதலான விலைக்குத் தாம் வாங்கி விட்டதைச் சபை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று வழக்காளிக்க வேண்டுமென்றும் சபை ஒர் ஒப்பந்தத்தை மீறிவிட்டதாலும் ஆதலாற் சபை தமக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்றும் வழக்காளி கூறுகிறார்.

ஒப்பந்தம் கடைக்கு வரவேண்டுமாலுங் அது சபையால் அங்கீகரிக்கப்படவேண்டுமென்றும் அறிக்கையிற் குறிப்பிட்டிருந்த விபரங்களை பற்றி விசாரிப்பதற்கு வழக்காளி சபையின் காரியாலயத்துக்குச் சென்றிருந்தால் அவருக்கு அச்சம் பற்றித் தெரிந்திருக்குமென்றும் சந்தைக் குத்தகை ஏலத்தில் விற்பனையானபின்னர், அந்தத் தொகை போதாதென்றும் சபை அங்கீகரித்தாறுன் அதை ஏற்றுக் கொள்ள முடியுமென்றும் தலைவர் வழக்காளியிடம் தெரிவித்திருப்பதாலும் சபையின் சாரபாகக் கூறப்படுகிறது; தலைவர் அவ்விதம் கூறவில்லையென்று வழக்காளி தெரிவித்திருக்கிறார். எனக்கு வழக்காளி பக்கச் சாக்ஷியத்தைக் காட்டிலும் தலைவரின் சாக்ஷியத்தில் அதிக கம்பீரமிருக்கிறது. பொது ஏலத்தில் விற்பனை நடைபெறுமென்று ஒருமுறை அறிவித்துவிட்டால், விற்பனை செய்பவர் ஆகக் கூடுதலாக யார் கேட்டிருக்கிறார் அவர்களின் விலையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வழக்காளிக்கு ரூபா 150 கஷ்டநஷ்டம்

90 ரூபாய் அதிகம் வருமாறத் திறமாகச் சபை செய்துகொண்ட வியாபாரம் கேவலமானது. சரவணமுத்துவும் சண்முகமுத்துலிங்கரும் ஏலவிற்பனையின் போது வழக்காளியை விடக் கூடுதலான விலைக்குச் சந்தைக் குத்தகையைக் கேட்டிருக்கலாம். அப்படியாதுக்காக அதிகக் கூடுதலான விலை கேட்டவரின் நிலையினைப் பட்டினசபை யோசரித்துவிட்டது. இத்தகைய சூழப்நடந்தும் ஏல விற்பனையிற் சனங்களுக்கு எவ்விதம் நம்பிக்கையிருக்க முடியும்?

ஆகவே, வழக்காளிக்கு நஷ்ட ஈடாக 150 ரூபாய் கொடுப்பதோடு அவர் பிரதிவாதியிடம் பிணைப்பணமாகப் பெற்ற 50 ரூபாயையும் அவருக்குக் கொடுக்கவேண்டுமென்றான தீர்ப்பளிக்கிறேன். ந. தி.

பரந்தனில் அபினும் கஞ்சாவும்

சங்கானை மஜிஸ்பரிசோதகர் கண்டுபிடித்தார்

5-7-41

சங்கானை மஜிஸ்பரிசோதகர் திரு. N. துரைராஜநினைம் பரந்தனென்னுமிடத்தில 259 இறத்தல் கஞ்சாவையும் 341 இறுத்தல் அபினையும் புதைத்து வைக்கப்பட்டவிடத்திலிருந்து எடுத்துவிட்டதாக வறிவிக்கிறார்.

இந்தப் பிடிபட்ட அபினும் கஞ்சாவும் ஒரு வள்ளுவெட்டித்துறை வரையாறும் வேறு கவாலி வரிகளாலும் கார் மூலமாகக் கொணரும்புக்குக் கொண்டு செல்வாரக்கு என்னாமுன்னமே ஒரு அறிவித்தல் மஜிஸ்பரிசோதகர்க்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இத்தகவலை அறிந்ததும் இவர்களைப் பிடிப்பதற்கு ஆனியிறவில் மறைந்திருந்தனர். அடுத்தநாள் பாரதன் கடற்கரை யோரத்தில் ஒரு படகையும் மேற்கூறிய வாசிகளையும் கண்டதும் ஐயுறவு கொண்டு ஆட்களையும் படகையும் சோதனை செய்த பின்னர்க்கடற்கரையோரத்தில் எல்கேயாருக்குப் புதைக்கப்பட்டிருக்கக் கூடுமென்று பார்த்தபொழுது 24 பார்சல் கஞ்சாவையும் அபினையும் கண்டெடுத்தனர். இந்தக் கஞ்சாவையும் அபினையும் யாழ்ப்பாணம் கச்சேரியிலுள்ள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாகவறிகிறோம். ந-வி

கண்டெடுத்தனர். இந்தக் கஞ்சாவையும் அபினையும் யாழ்ப்பாணம் கச்சேரியிலுள்ள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாகவறிகிறோம். ந-வி

நதிகளுக்கருகில் மா பெரும் யுத்தம் ஆரம்பம்

ரூஷிய தலைநகருக்கு 300 மைலுக்கு இப்பால் ஜெர்மானியப் படை

டார்னோப்போ லுக்கருகில் ஜெர்மனியர் முயற்சி தோல்வியுற்றது

லண்டன், ஜூலை 5உ

மொஸ்கோவை நோக்கி ஜெர்மனிய டாங்கிகள் மீளவும் தாக்கிச் செல்வதைத் தொடர்ந்து கடந்தியதன் பலனாக, "நதிகளுக் கணித்தான யுத்தம்" என்று ஒரு பெரிய யுத்தம் வென்னா ரூஷியாவில் ஆரம்பித்திருக்கிறது.

ஸ்மொலென்ஸ்க் என்னுமிடத்திலிருந்து 90 மைல்களுக்கிப்பாலுள்ள டினெய்ப்பர் என்னும் நகரைச் சென்று சேர்ந்து விட்டதாக ஜெர்மனியர் சொல்லிக் கொள்கிறார்கள். இதே உண்மையானால், ஜெர்மனிய பான்ஸர் படைகள் இப்போது ரூஷிய தலைநகருக்கு 300 மைல்களுக்கிப்பால் நிற்கின்றன என்று சொல்லவேண்டும்.

ரூஷிய ஜெய்தி நிலையம் இதை மறுக்கிறார்களில்லை யாயினும், ஜெர்மானியர் பெரிஸினா நதிக்கரையோரப் பகுதிகளிற் பலநாட்களாக மேலே செல்ல முடியாதவண்ணம் தடையுண்டு நின்றமை, சென்ற இரு தினங்களில் ஏதோ ஒருவிதமாக முன்னேற வழிகண்டு பிடித்து விட்டதாகத் தெரிகிறது.

பெரிஸினா நதிக்கும் ட்ரட் நதிக்கும் அணித்தாக உக்கிரமான யுத்தம் நடப்பதாக மொஸ்கோ செய்தி கூறுகின்றது. ட்ரட்நதி இப்பகுதியில் டினெய்ப்பருக்கு 30 மைலுக்கு மேற்கே ஏறக்குறைய சமாந்திரமாக ஓடும் நதியாகும்.

தெற்கே, ரூஷியாவின் விளைபொருள் நிலையமாகவுள்ள உக்றேயினுக்கூடாகச் செல்ல ஜெர்மானியர் எடுத்துக் கொண்ட முயற்சி வினுயிற்று. பொலண்டின் தென்கிழக்கே உள்ளதாகிய டார்னோப்போல் என்னுமிடத்துக் கருகாமையில் நிகழ்த்திய தாக்குதலிற் சித்தியடையாமல் தோல்வியுற்று ஜெர்மானியர் ஏறக்குறைய 120 மைல் வடகிழக்கேயுள்ள கோவோ கிராட்வேலின்னில் என்னுமிடத்துக்குத் தம் டாங்கிப் படைகளைக் கொண்டு போகவேண்டிய வராயினர்.

கொக்குவில் இந்துக்கல்லூரி

திரு. சுந்தரலிங்கம் தலைமையில் பரிசளிப்பு விழா

கல்லூரிக் கருகில் விளையாட்டுமுன்றில்வேண்டும்

சென்ற வெள்ளிக்கிழமை யன்று கொக்குவில் இந்துக்கல்லூரி வருடாந்த பரிசளிப்புவிழா நடைபெற்றது. தேவார பாராயணத்தோடு கூட்டம் ஆரம்பமானது. நிகழ்ச்சிப் பத்திரத்திற் பல சுவை தரத்தக்க பகுதிகள் இருந்தன. அவற்றுள் ஒன்று கல்லூரிமாணவிகள் சிலரதி கர்நாடக சங்கீதம் படித்துக் காட்டப்பட்டமை. இது மிக அழகாக இருந்தது. டிஸ்ரிக்ட் நீதிபதி திரு. C. குமாரசுவாமியவர்களின் பாரியார் பரிசுகளை வழங்கினார்.

அன்று சொற்பொழிவு நிகழ்த்திய பிரமுகர்தர்களுள் மதநிலை கன்னூரிப்பிரதமாசிரியர் மிஸ்டர், வில்லியம் ஒருவரவர். அவர் பேசியதன்பின், அதிகார் ராகதரர்பேசினார். அவர் கல்லூரியின் வரலாற்றைக் குறிப்பிட்டார். திரு. C. காதரவிங்கம் தலைமை வகித்து நிகழ்த்திய சொற்பொழிவிற் கல்லூரிக் கருகாமையில் ஒரு விளையாட்டுமுன்றில் அமைப்பதன் அவசியத்தைப் பற்றி வற்புறுத்திப் பேசினார். அதனால் 'நிலைமையில் தவரிக்கப்படும் இலக்கைச் சர்வகலாசாலை அமைப்புச் நிட்டத்'தில் அங்கு கல்விபயிலும் மாணவர்கள் விளையாடுதற்குரிய விளையாட்டுமுன்றில் கலலூரியிலிருந்து இரண்டு மைல்களுக்கதிகமான தூரத்தே அமைக்க உத்தேசித்திருப்பதைக் கண்டித்துப் பேசினார்.

ஈற்றில் கூட்டம் தேவாரபாராயணத்தோடு இனிது நிறைவேறியது. ந-வி.

குடியியல் நூல்

1-ம் 2-ம் புத்தகங்கள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் வெளியிடப்பட்டுள்ள குடியியல்நூல் முதலாம் இரண்டாம் புத்தகங்கள் இலங்கை வித்தியா பகுப்பாரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. அங்கோர் இலக்கம் வீதம் விலை: திகதி 3-7-41.

பங்களூருக் கருகே கோர விபத்து

இளங் தம்பதிகளின் பரிதாப முடிவு

கார் நொருங்கிற்று

பங்களூர், ஜூலை 2

திங்கட்கிழமை யன்று காலை சென்னை பங்களூர் தெருவில் பங்களூரிலிருந்து 1வது மைலில் ஒரு கோரமான மோட்டார் விபத்து ஏற்பட்டது. சென்னைவாசியான ஸ்ரீமான் கோவிந்தராஜ முதலியாரின் 23- வயதுள்ள மகன் ஸ்ரீநிவாஸ இவ்விபத்திற்குள்ளானார். அவருக்குப் பலத்த காயங்கள் ஏற்பட்டு வெளிக் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கனுப்பப்பட்டார். அவர் மேற்று மாண் இறந்துவிட்டார்.

ஸ்ரீமதி லீலாவின் கணவன் ஸ்ரீ குமாவேல கார் ஓட்டிச் சென்றார். அவர் உடனே ஸ்தலத்தில் இறந்தார். திரு. குமாவேலுகாரில் தமது மனைவியுடனும், தமது சகோதரர் ஸ்ரீமான் வ. வீ. சிவப்பிரகாச முதலியாருட னும் சென்னைக்குச் சென்றுகொண்டிருந்ததாகத் தெரிகிறது. கார் பாதையிலிருந்து விலகி ஒரு மரத்தின்மீது மோதித் தலைகீழாகப் பொருவிட்டது.

அவ்வழியே சென்ற இராணுவ அதிகாரி ஸ்ரீ குமாவேலின் பிரேதத்தை எடுத்து வந்தார். இவ்விபத்தில் காயமுற்ற ஸ்ரீமதி லீலையையும், ஸ்ரீ குமாவேலின் சகோதரியையும் அவர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சேர்த்தார். ஸ்ரீ முதலியார் குணமடைந்து வருகிறார்;

புதிய பாதுகாப்பு விதிகள்

தோரபிநபர்ற் தயாரிக்கப்பட்ட புதிய பாதுகாப்பு விதிகள் சென்ற வெள்ளிக்கிழமை வெளியான கசெற்றிற் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

பொதுஜனங்களின் கட்டுப்பாடு கெதைக்கப்படுவதைத் தடை செய்தல் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தல் சர்தேசிக்கத்தக்கவர்களின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தல் சில இடங்களிலும் சில பிராந்தியங்களிலுமுள்ளவர்களைப் பரிசோதனை செய்தல் ஆகிய இவைகளே இந்த விதிகளின் நோக்கங்களாகும். இவ்விபத்துக்களைச் சமாளிப்பதற்குத் தேவையான படைக்கு விசேஷ அதிகாரங்களை வழங்கப்பட்டிருக்கின்றன. குறற்சாட்டுகள் சம்பந்தமான சாக்ஷியங்களைப் பெறுவதற்கு ஸ்தலங்களில் தலைமை பரிசோதனையிடுவதற்கு விருப்பங்கள் விளங்குவதற்குப் பழைய நீதிபதிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

ஸேர். சிக்கந்தரின் எச்சரிக்கை

லாகூர் ஜூலை 1—

ஜெர்மனிக்கும் ரூஷியாவுக்கு மிடையே யுத்தம் மூண்டுவிட்டமையால், இனி நமக்குப் பயமில்லையென்றிருக்கக்கூடாது. ரூஷியர் எதிரியைத் தோற்கடியாவிட்டால் இந்தியாமீது ராஜிய படையெடுப்பு ஏற்படலாம். ஆயின் ரூஷியாவைச் சமயமாக ஜெர்மனியர் ஜெயித்துவிட முடியாது. இருப்பினும், நம் புதுத் முயற்சியை நான முன் ஜாக்கிரதையாக அதிகரிக்கவேண்டும் என்று ஸேர். சிக்கந்தர் ஹயத்கான் கூறினார்.

ஜி. ஐ. பி. பாதையில் உடைப்பு

பம்பாய்க்குப் புகைவண்டி போகவில்லை

பம்பாய் ஜூலை 2

சென்ற 24 மணி நேரமாகப் பம்பாய்க்கும் இந்தியாவிலுள்ள மற்ற நகரங்களுக்கும் தந்தி போகுவரத்தோ டெலிபோன் போகுவரத்தோ ஒன்றும் நடக்கவில்லை. காயுரிக்கும் அலரிருந்து வந்தாயுகளும் ஒரு லயின்தான் வேலை செய்கிறது. ஜி. ஐ. பி. பாதையின் மேற்று உடைப்பேற்பட்டது. கல்யாணுக்கப்பால் வண்டிகள் போக வில்லை. பி. பி. வி. ஐ. பாதையிலும் உடைப்பேற்பட்டு விட்டது. புகைசுருக்குவில் வண்டிகள் நிற்கின்றன. நேற்றுக்காலை 10-15 மணிக்குப் பம்பாய் போய் சேரவேண்டிய சென்னை எக்ஸ்பிரஸ் இன்னும் பம்பாய்க்குப் போகவில்லை. அது கல்யாணுக்கருகில் தடைப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

செய்திக்குத் தடை

இதனால் நேற்று முதலே எழக்கப்படி தந்திகள் வரவில்லை. பம்பாய் பக்கத்தில் நனத்தமழை பெய்ததன் காரணமாகக் கம்பிகளுந் தந்தி டெலிபோன் கம்பிகளும் அறுத்து விட்டன.

ரூஷ்யாவுக்குப் பிரிட்டன் முழுமனத்துடன் உதவி செய்யும்

ஒத்துழைப்பு உறுதியானதென்று மிஸ்டர். ஈடன் கூறுகிறார்

லண்டன் ஜூலை 5

"ரூஷியர்கள் மிக மோன தைரியத்தோடு யுதஞ் செய்கிறார்கள். எக்காலானவரை அவர்களுக்கு நாம் உதவி புரிவோம். எங்கள் முழுப்பலத்தையுஞ் சேர்த்து நாம் அவர்களோடு ஒத்துழைப்போம்." என்று இன்று ஒரு பெருந்திரளான ஜனங்கள் கூடிய கூட்டத்திற் பேசும்போது மிஸ்டர். அந்தோனி ஈடன் குறிப்பிட்டார்.

"இந்தக் கூட்டு முயற்சியில் எங்கள் பக்கத்தில் எதுவும் ஒளிந்தேனும் பின்னுக்குத் தேவையென்றேனும் பேணி வைக்கப்படமாட்டாது. இரண்டாம் முறையாகச் சிந்திப்பதற்கெனவும் யாம் ஒன்றையும் பேணிவைத்திருக்க மாட்டோம். இறுதியாக முடிப்பதற்கே நாமெல்லோரும் கஷ்டங்களைக்கட்டி நிற்கிறோம். அதைப் பூர்த்தி செய்வதற்கு எவரேனா என்னென்ன உதவியைச் செய்கின்றனரோ அவரையெல்லாம், அவர் செய்யும் உதவிக்கேயெல்லாம் நாம் வரவேற்கின்றோம்" என்றும் அவர் அக்கூட்டத்திற் கச்சிதரர்.

ருஷியசர்வாதிகாரியாகிய ஸ்ராலினுடைய பேச்சு!

"உலகத்திலே வெல்ல முடியாத சைநியம் இல்லை"

3-7-41

ருஷிய சர்வாதிகாரியாகிய ஸ்ராலின் இந்த யூலாய் மாசம் 3-ந்வ தமது நாட்டினர்க்கும் உலகினர்க்கும் ஒலிபரப்புங் கருவி மூலமாக இப்பொழுது மூண்டு நடைபெறும் யுத்தத்தையிட்டுப் பின்வருமாறு கூறியுள்ளார்:—

